தேதி:2 .10.63.
உரிமையாளரின் பெயர்: எல்.ஆர்.பஞ்சாட்சரம்.
ஓலைச்சுவடியின் பெயர்: "வைத்திய முறை அட்டவணை-2"
இடம்:- சிவதாபுரம், சேலம்.

அகஸ்தியர் வகாரசூத்திரம் 200

* * *

வைத்திய முறை அட்டவணை - 2.

*இந்நூலின் தொடக்கம் 11 ஏடுகளில் உள்ள 40 செய்யுட்கள் சிதைந்து போயின.

41. பாரப்பா------ன்னச் சுண்ணமுடன் வீரம் பரிவாகப் பச்சைக்கி லுங்கி பூட்டி
சீரப்பா----வ்லே புடத்திலே செல்லப்பா அரிசியுடன் வீரங் கூட்டி
சேரப்பா வங்கக்கைப் பொடிநிற ஊதச் சொல்ப் பெரிய வங்கமதை சுண்ணமாகும்
மூரப்பா வங்கத்தில் வீரங் கூட்டி அப்பவே காந்தத்தைச் சரியா யாட்டே.

42. ஆட்டியே புடம் போட சயமாகும் அந்த முறை பாஷாணம் சயமாகும்
பூட்டுவாய் தாளகமும் சயமாகும் புகழ் பெரிய லோகமது சயமாகும்
பூட்டுவாய் மடலியங் கல்லுப்பு யீயம் முற்றியாக் கிச்சி யீயம் லிங்கமீயம்
பூட்டுவாய் நவச்சாரம் யீயமாகும் பொன்னி மிளை யீயம் பொன்யீயந் தானே.

43. பொன்னீய வெள்ளியீய மப்பா யீயமாகும் புகழுள்ள நவலோகம் யீயமாகும்
வன்மையுள்ள நவரெத்தினம் யீயமாகும் வாய்த்ததொரு உப்பெல்லா மீயமாகும்
நன்மையமாச் சரக்கு வகை அறுபத்து நாலும் நவலோகம் நவரெத்தினம் பதினெட்டாமும்
சொன்ன நீரெழு உபரச சரக்காற தொன்னூற்றித் தாறுஞ் சரக்கைச் சொல்லலாச்சே.

44. ஆச்சப்பா உபரசத்தின் வகையைச் கேளு அட்டமொரு பிட்டமொரு நண்டு வண்டு
வாச்சப்பா பாயஞ்சம் வேங்கைப் பல்லு வாய்த்ததொரு கரிக்கோடு கல் மருந்து
பேச்சப்பா கருங் காக்காய் மட்டையோடு பெரிய தொரு சரிக் குருவி யங்கத்தோடு
ஏச்சப்பா செங்கருகுப் பித்தச் சங்கு மீனையான செம்பருத்தி கல்லுங் கூட்டே

45. கூட்டுவது சாரணையின் வகையைக் கேளு கூசகத் தொன்னூற்றித்தா வகையுங் கொண்டு
ஊட்டுவது மனி சொன்ன வங்கச் சுண்ணம் அழகான வீரமிட்டு வெள்வெளு யாட்டி
காட்டுவது வில்லை செய்து சல்வாக புசு தாமருக்க யீய மப்பா தொன்னூற்றித்தாறும்
கூட்டுவது ரசன் கூட்டிக் களிகை செய்வாய் முக்கியமுடன் சாரணையின் வகை சொல்வேனே.

46. சொல்லக் கேள் பன்னிரெண்டு மச்சாடி குருமத உருகையிலே சொல்லி
அல்லவே தொன்னூற்றித்தா சரக்கயத்தை அளவாகத் தொன்னூற்றித்தா மாவுங் கூட்டி
வல்லமையாய் யுருக்கி வெருளிகையாகு மகத்தான சாரணையின் வகை தானப்பா
செல்லப்பா சாரணையைச் சென்ன பாம செல்றவுடன் குளிகை யிச கெவமாமே.

47. ஆமப்பா வழலை யொன்று அண்டமாறு மாட்டி வில்லை யிரவி கண்டாகா சிப் போது
ஆமப்பா வழலை யொன்று நன் ஆவ அதிசமர் பூரி வரச் சுண்ணமாகும்
ஆமப்பா வழலை யொன்று சத்தையாக ஆட்டவேசுன்ன ஏகைக் கீர் தாமே.

48. தானென்ற சத்கண்ணம் ரசங் கூட்டிச் சமருக அத்த கண்ணச் முகையுஞ் சேர்த்து
வானென்ற வெங் கருவைத் தன்னிராக்கி எச்சையுடன் அத்த கண்ண வகையு மாட்டி
மேனென்ற குகை பிடித்து வைத்துக் கொண்டு எடுத்ததொரு கண்ண மெல்லா மிதிலே பூசு
நானன்றிச் சொல்வதல்லால் மற்றோர் சொல்வார் நாகத்திலிட்டு வகை சொல்வேனே.

49. கேளப்பா கண்ணத்தின் சிறவகத்தில் கிருசையுள் நவச்சாரந் தன்னை யாட்டி
எழப்பா நாள் மட்டு மாட்டிச் செல்ல் எடுத்ததொரு சாரமதை வில்லை கட்டி
குளப்பா ஓட்டில் வைத்துப் புடத் தப் போடு சொல்லரிய சார மதில் கட்டிப்போச்சு
வாளப்பா பங்காளில் நீரதாச்சு மகத்தான நாகத்தை யுருக்கிச் சாயே.

50. சாயப்பா அக்குத்திக் சார்க்கவே தான் தட்டுடட நாகந்தான் கட்டிப் போகும்
நெய்யப்பா செந்தூர திராவகத்தில் நீதியுடன் நாகத்தில் சுருக்குத் தாக்கு
வாயப்பா கமலந் தான்முருக்கம் பூப்போல் வளமான செந்தூரமாகும் பாரு
நேயப்பா நவலோகம் களஞ்சி யொன்றில் நிசமாக மச்சாடி கொடுக்க மாற்றே.

51. மாத்தெட்டுக் கண்டு தடா சீனக்காரம் வளமான சாரநீர் துத்தியாட்டி
சாத்தெட்டு நாள் சுத்திச் சென்றதாலும் தட்டுண்ட சீனந்தான் கட்டிப் போகும்
பாத்தெட்டொன்றெ யிருக்க வகையைக் கேளு புசுத்த காரங் கட்டினதங் காரமுந் தான்
நீத்தெடா சரி யிடையாய்க் கார சாரம் நேராக முப்பூவுங் கூட்டி வைப்பே.

52. கவப்பப்பா பச்சை நலச்சாரம் புட்டி வைக்கவே மகத்தான செய்நீராகும்
மெய்யப்பா பூர பத்து நாள பேறும் யிந்த நீராலே தான் மெழுகாகும்
செய்யப்பா நவலோகம் வேதையாகும் திடமாகத் த மதிப்பில் பரிசமாகும்
தோயப்பா சத்துருமாம் காங்கமாகும் தோன்ற பதிலு மாத்துக் காணுந்தாமே.

53. காணப்பா சரக்கு வகை அரபத்திலு தனித் தனியே மெழுகது தான் களஞ்சி வீதம்
பூணப்பா வில்லை கட்டிக் கலசத்திட்டுப் புதமையாய்ப் பாதாளந் தன்னில் வைத்து
நீளப்பா மேல் மூடிச் சீலை செய்து நிசமாகத் தீயாட்டத் தயிலமாகும்
ஆளப்பா பீங்கானி லிறக்கினத்தை அவலாதி மாறிய பின் னெடுத்துப் பாரே.

54. எடுத்த பின்பு நிறுத்துப் பாரிடை சரியாய்க் காணும் மெய்க் காந்தயிலமிது யாருஞ் சொல்லார்
தொடுத்த தொரு காரியந்தான் யெல்லாம் வெல்லும் தொல்லைதற்கு வேதை யிது மலை போலாகும்
அடுத்த தொரு வில்லைகளில்லை பயமுமில்லை அரபத்திலுங் கோடி கிட்டிகளாகும்
தடுப்பதொரு சாபமில்லை சூர சங்கார கால சர்பத்தால் பயமுமில்லை தயிலங் கொள்ளே.

55. கொள்ளப்பா மண்டலந்தான் ஒருமா வீதம் கொண்டாக்கால் சிவனதுமைக் கூட வாழ்வான்
கொள்ளப்பா கற்பமிது கொண்டாயாகில் கோடியுகஞ்செல்லிடமோசமில்லைத்தான்
கொள்ளப்பா கற்பவகை நாற்றெட்டுந் தான் கொண்டாக் காலவனே யோகி யவனே ஞானி
கொள்ளப்பா வல்லாரைக் கற்பங் கொண்டு கொள்ளப்பா மற்ற கற்பங் கொண்டு பாரே.

56. பாரப்பா வச்சிலையிலே வீரங் கூட்டி பரிவாகக் கெந்தகத்துக்கங்கி கூட்டி
நேரப்பா கட்டு வகைத் திராவகத்தைக் குத்தி நிதானகத் தீயாட்டத் தந்தம் போலக் கட்டும்
சேரப்பா மெழுகு வகைத் திராவகத்தால் தீயாட்ட மெழுகாகுஞ் செம்பிலே வேதை
பாரப்பா யிதின் மாத்துப் பதினாறும் பாஷாண பல மென்ற பேரிதாமே.

57. தாமென்ற பாஷாணந் தன்னைக் கட்டத் தாரணியில் வாதிகளோ அறியப் போகும்
பரமென்ற கம்பி யுப்பு அரையாய்க் கொண்டு பையவே அத்தாலே மூடிச் செய்வ
மாரென்ற முன் சொன்னபடியே நீத்து நீத்திடவே பாஷாணங் கட்டிப் போகும்
யேனென்ற வீரத்தின் திரமே நீத்தி யெடுத்திடவே பாஷாணம் பஸ்பமாமே.

58. பாஷாணக் கட்டினத்தை யெடுத்துக் கொண்டு பண்பான செந்தூரத் திராவகத்தால்
கசர்மல் சுருக்கிடவே செந்தூரந் தானங் கொண்டதிலே ரசத்தை மெள்ளக் கொடுத்தாக்கு
பூசவே வேதையிது தீயில் தாக்க பொன் பசும் பொன்னெம்பரை பட்டியாகும்
நேசமுடன் நவலோகம் வேதையாகும் நீதியுள்ள பாசாணப் போக்கிதுதானே.

59. தாவென்ற நிலைமந்த அறிய வேணும் சகலவைக்குங் கல்லானை காணு வேணும்
நானென்ற கோசமதை பச்சமாகும் நல் விலையா யிருப்பதற்கு மதம் பாரப்பா
வானென்ற பரத்தை யறிய வேணும் வளமான அஷ்ட சத்தி காண வேணும்
யேனென்று பேசுதற்குப் பஞ்சமித்திரம் வேறு பிறப்புக் கல்லானை சொன்னாரே.

60. வாருன சுக்கிலத்தை யறிய மாட்டார் மாடு போல் நீரை விடக் காண் பாரப்பா
தேறன வன்னி அறிய மாட்டார் சித்தி யுப்புக் கருவென்று சிதறிப் பார்ப்பார்
ஆறன மித்திரமப்பா சத்தியாச்சு அடங்காத நீலியப்பா அடியைப் பாரு
பேரான பூரணமாம் மனோன்மணித் தாய் பேர் தீண்டார் நாதமுத தேன் போலாமே

61. தேன் மொழியாள் பூரணத்தின் மேலே யேறித் தேரோட்டம் போலவே ஞானத் தான்
தாள் மொழியாய்க் கை முறையாச்சச் சரக்கெல்லாந் தான் தட்டுண்டு போச்சதப்பா சனங்களெல்லாம்
வாள் மொழியின் பிறந்தவளோ லோகந்தாட்டு மடக்கும் வழி ஆயிரந்தான் சொல்வ வாரும்
மேன் மொழி வதின்னீர் தான் சரக்கைக் கொல்லும் மென் பதட்டியில் மடக்க ரசப் பொன்னுமே.

62. பொன்னடியும் வழலையிலே சேர்ந்த தாலும் பூரணமுங் கூடியதிலேறித் தாலும்
சொன்ன பலன் தவறுண்டோ வேதைப் போக்கு சொற் பெரிய நாத வித்தை யறிய மூடா
கன்னி வித்தை செய்தாலும் பூரணத்திலேறு கட்டிலுலவ்வளவுங் கட்டுமப்பா
பின் வும் வித்தையா யிருந்தாலொன்று மில்லை பேயாடிப் பிணமாடிப் போனதொப்போ

63. பிணமாடிப் போனதொக்கு மறியா மட்டை பிலத்த புத்திக் காறனுக்குத் தெய்வம்
பிணமாடிப் போன தொக்கும் கற்றறிந்த மட்டை சகதிலேதீ கல்லெறிந்த வாழ். கயாகும்
மணமாடிப் போனதொக்கு மகிமையுள்ள ஞான மதிய மூர்தங் கொண்டவனே ஞானமேயாம்

64. ஆமப்பா வழலை நிலம்புலம் பத்தாக ஆயி சென்ற விடமெல்லாம் அப்படியே யாகும்
வாமப்பா வலை கண்டாலவனே வாதி மானிலத்தில் யோகியப்பா செய்தி வேறே
காமப்பால் இடித்த வெறி நிலவ்ப்பாகுங் காணப்பா வெடியுப்பு கூடனப்பா
நாமப்பா யோமப்பா வென்றிருந்தால் நாயகியை நாயகனுர் காணலாச்சே.

65. ஆச்சப்பா யித்தலையுங் கன்னிக் கூடு அப்பனே கூடன் மணியாடக் கேரு
நீச்சப்பா வெள்ள மென்று ஆகாசந்தான் நெடிய கம்பி வெடியுப்புப் பிறவியப்பா
வாச்சதொரு கூடலைத் தான் கட்டக் கேசு வளலையுப்புச் சுன்னமுடன் வீர சுன்னம்
பாச்சப்பா கண்ட சுன்னம் சாரங் கூட்டி பனியில் பீங்கானில் நீருண்டாமே.

66. உண்டுகொள்ளுந் தண்ணீரிலே அவைத்துப் போட வொன்பது நாள் வைத்தின பின்
உலர்த்திப் போடு மண்டதொரு சுண்ணம்பாய்ப் போகுமப்பா மகத்தான சுன்னமுடன் சவ்வீர கூட்டி
கொண்டு மெள்ளக் கொடிக் கரி யிருக்கி யாட்டு கூட்டப்பா கெந்தி தலைத் தாக்கி போடு
விண்டு பெண்டு தலைக் கொடுக்க ரசத்தைத் தாக்கு வேதையட செந்தூரங் களங்க மாமே

67. களங்க மந்த களங்கு செம்பாயிரத்தில் கட்டி விட்ட செந்தூரமொரு மாத்தாக்கு
விளங்குதற்குப் பொன்னாகும் நோயில்லாப் பொன் மாத்துப் பத்தா யிருக்குமப்பா களங்க வேதை
யிளங்கும் மாரிச்சத்தாலே மடலை யாட்டி இருண்ட உமிக் காந்தலிலே புதைத்து வைத்து
பழும் புளியின் பதம் போலே யெடுத்துக் கொண்டு பாங்காகச் செய்நீரில் தோய்த்து வாட்டிடு

68. வாட்டிய பின் உறைந்தது தான் மெழுகதாகும் மகத்தான சவ்வீரங் கூட்டிக் கொண்டு
ஆட்டியே மஞ்சாளி உருண்டை செய்து அப்பனே ஒரு உருண்டை புடக்க வேகம்
பாட்டமாய்ப் புடக காட்ட வீதி யெல்லாம் பசும் பொன்னுந் தாபமில் பளிக்கப் போமோ
நாட்டமா யிவ்வேதை யாகுமாகும் நாதமிக கண்டவனே வாதியாமே.

69. வாதியப்பா யோகமே யிருக்க வேணும் மனோன்மணியை யென்னாந் தியானம் வேணும்
நீதமுடன் ரோசத்தைத் தள்ள வேணும் நிலையற்ற சிற்றின்பம் நிகழ்ந்த வேணும்
சாதனமாய்ப் போசனத்தைத் தள்ள வேணும் சதாகாலம் மவுனத்திலிருக்க வேணும்
அதி சித்தியாய் பூசை பண்ண வேணும் அப்போதே தீர்
சித்த அதிசயமாமே.

70. சொல்வதென்ன உப்பு உவர்ப்பு மூன்றமப்பா தடியான மேகத்தின்ராளாச்சு
கொல்வதொரு நீரப்பா மித்திரமாச்சு கோவிலுக்குள் கொம்பானை கல்லலாலாச்சு
வெல்வதற்கு பீடத்திலே வேற வேதாந்த வெடி சத்தங் கண்டாலாச்சு
வல்வந்தமான புவ்ராத்தாளாச்சு மடங்காத பேரெல்லா மடிந்து போச்சே.

71. மடிந்த யிந்து தனை யெடுத்து ஆட வேணும் யில்லாட்டால் மாடு போல் திரிய வேணும்
சுமந்து விடுங் கார்ச்சலப்பா அறிய வேணும் யில்லாட்டால் கலங்கனைப் போல் குலைக்க வேணும்
கடிந்ததொரு சரக்கதனைக் கட்ட வேணும் கட்டாட்டால் வாகினி போல் கதற வேணும்
விடிந்திர வியுருதிக்கி முன்வே கட்டந்தான் மேவியே சுவுதப்பா அறிந்து பாரே.

72. அறிந்திந்த நூல் பார்த்து வேதை பாரு அல்லாட்டால் சித்தரிடம் ஞானியடஞ்
செறிந்தல்லோக வலையிட்டுக் களிப் போலாச்சு செய்நீரின் மித்திமிறுத் திவிதனையு மாச்சு
பிரிந்து ஒரு சரக்குகளை தொட்டாமல் போல்ப் பிடிக்கத் தப்பாது கட்டிக் கொண்டு
அமிந்தந்தக் கல்லானை செத்து தாலுல் கொடு முடியாம் பாம்பதனைக் கூறவோமே.

73. கூறுகின்ற பாம்புதனை யென்னை வாங்கக் கொடியதொரு கல்லானை வீரச்சுன்னம்
தேடுகின்ற வளலை தனில் தணலில் வாட்டச் செத்தங்கே யென்னை யெல்லா மடிந்து போம்
முறுகின்ற உப்பு சுன்னம் கண்ட ரசுன்னம் ஒகோ கோ வீரச்சுன்னம் பழச் ~~[illegible]~~ சாத்தாலாட்டி
வீறுகின்ற பாம்பதனைக் கவசங் கட்டி விளக்கிலே வாட்ட யென்னை யெல்லாம் போமே.

74. என்னையெல்லாம் போவ பின்பு வழலை வேகம் யிளங்காத பாம்பாலே சரக் கெல்லாஞ்சாம்
வன்ன முள்ள வழலையிலே வீரங் கட்டி வளமான அரிசிக்கு அங்கி பூட்டி
என்னமுடனுதிடவே சுன்னமாகும் யிதினாலே தாளகந்தான் சலவையாகும்
முன் மப்பா பொன்னி மிளை நீறிப் போகும் முத்தமனே நிமிளையுடன் வீரங் கட்டே.

75. கூட்டியே வங்கத்திலப்பி பூத கொடியதொரு சன்னம்பாங் கண்டரக் கப்பி
ஆட்டியே கண்டருடன் வீரங் கட்டி அரிதேவிக்கங்கி பூட்டு ஊதிப் போடு
நீட்டிய தோர் தாளகத்தைக் கெந்திக் கப்பி நிசமாக ஐங்குகையில் வைத்து ஊது
வெட்டங்கி வேக மடங்கிச் சுன்னமாச்சு வீரமிட தார சுன்னம்பாம் வீரங் கட்டே.

76. கூட்டியே வங்கத்திலப்பி பூத கொடியதொரு சுன்னும்பாங் கண்டரக் கப்பி
ஆட்டியே கண்டருடன் வீரங் கட்டி அரிதேவிக் கங்கி பூட்டு ஊதிப் போடு
நீட்டியதோர் தாளகத்தைக் கெந்திக்கப்பி நிசமாக ஐங்குகையில் வைத்து ஊது
வெட்டங்கி வேகமடங்கிச் சுன்னமாச்சுவீரமிட தார சுன்னும்பாம் வீரங் கட்டே.

77. வீரமிட்டு அரிசிக்கு கவசங் கட்டி விளக்கிலே வாட்டையிலே மெழுகுமாகும்
காரமிட்டு ஐந்து சுன்னக் கைகயிறா தக் கடுங் காரச் சுன்னம்பாம் வீரங் கட்டு
பூரத்தில் பொதிந்து கதச் சுன்னும்பாகும் புகழ் பெறவே கல்நாருக் கப்பிப் போடே.

78. போட்டெடுக்கச் சுன்னமதில் வீரங் கட்டி பொன்னி மிளை தன்னையே ஊதிப் போடு
ஆட்டெடுத்த வங்கத்துக் கப்பிபூத அந்த முறை தாளகந்தான் சுன்னமாகும்
நீட்டெடுத்த லோகமது நீறிப் போகும் நிசமாக நாகமது சுன்னமாகும்
மூட்டெடுத்த சூதமது சுன்னமாகும் முனையான பரிமேலே யேறிச் செல்லே.

79. செல்லப்பா வீரத்தைக் கட்டிக் கொண்டு திடமாகத் தங்கத்தைக் கங்கி பூட்டிக்
கொள்ளப்பா அஞ்சு சுண்ணக் குகையிலாத கூ கூகூ கோ கோ கோதங்கச்சுண்ணம்
வெல்லப்பா தூரிசின் மேல் கவசங் கட்டி வீரமிட்டு ஐங்குகையிலாதச் சுண்ணம்
கல்லப்பா மண்ணப்பா மலை தானென்ன காவென்ன மரமென்ன சுண்ணக் காடே.

80. காடெல்லாந் திரிந்தலைந்து சுட்டாலென்ன கரிச்சுட்டுப் போவதுவே காண்பார்
நாடெல்லாம் பொன் மயமாயாக்கிப் போர்டும் நடமாடுந் தூரிசி யந்தச்சுண்ணந் தன்னை
ஆடலாஞ் சிங்கியதாய்ச் சேர்த்துப் போடு அடங்காத குருவப்பா அருசுக் சுண்ணம்
கோடெல்லாம் மலையெல்லா மரங்களெல்லாம் கொ முடியும் பசும் பொன்னாய்க் கூடும் பாரே.

81. பாரப்பா யிந்திருட பூசை கேளு பாரிலே பதினாறு முறத்துக் கீழே
நேரப்பா கசிந்தெடுத்து மேலே யுன்னி நிசமான பனிக்கால மேற் கொள் ார்கள்
ஆரப்பா யிவர் பெருமை யறியப் போறார் அடங்காத மனோன் மணி தானீன்ற நாதம்
பேரப்பா வகை கேளு சொல்வேன் சொல்வேன் பேசாதே பிரரோட யிந்தின் பூவே.

82. இந்தென்றும் பூவென்றும் கால் தானென்றும் யிணையான அடியென்றும் மூலமென்றும்
சந்திரனுப் பென்றும் பேர் சுரோணிதந்தான் தவமலை யென்றும் பேர் பூமிநாதம்
சுந்தரியார் சுட்டதென்று மண் தானென்றும் துலையாத நீரளிக்கு முப்ப தென்றும்
வந்த தொரு சத்தி யென்றுங் கன்னி யென்றும் மனோன் மணித் தாயென்றும் பேர் கண்டு கொள்ளே.

83. கண்டு கொள்ளுஞ் சிவந்தன்னைக் காணமாட்டார் கன்னிக்குத் தாலருச்சக வாழ்வார் மூர்த்தி
பண்டுவடனே யிவர் பேரு ரவி தானென்றும் பாலென்றும் வழலை யென்றும் பச்சை யென்றும்
தொண்டுடையார் முடியென்றுங் கல்லுப் பென்றுஞ் சுத்த ரவியால் விளைந்த நிலவுப் பென்றும்
முண்டிடவே யிந்தென்றும் பேரருக்க னென்றும் மூத்த சிவ சுத்தின் பரானந் தானே.

84. காணாத பொருளொன்று சொல்லக் கேளு கமல சத்த சகாரமு முண்டு விட்டேன்
நீனன தண்டாலே கீழே விட்டேன் நிசமாக வுப்புறைக்கும் நீர் தானுச்சு
நாளுவ தன்னீரை யிறைச்சுப் பாச்சு நாட்டிலுள்ளோர் கண்டல்லோருசியு மாச்சு
ஆனன தண்டிலே நீரைப் பாச்சு அடங்காத சிவகெங்கெங்கை யென்ற பேரே.

85. என்றதொரு நீராலே சரக்கெல்லாஞ் சாம் யேகாந்த உப்பிதப்பா சத்தி சத்தி
வென்றதொரு நீரப்பா வருணன் பிள்ளை மேலெழுந்த ரவி தனக்குச் சுத்தியாச்சு
நன்றான தன்னுன்ற நீரே யாதி ரசவாத மிதிற் பாரு சூதங் கட்டும்
குன்றான கெந்தகத்தைக் கொல்லுங் கொல்லுங் மடி கெடுத்த சத்தியுடன் கூடும் போதே.

86. போதுமென்ற தாக நீரெல்லா மற்றும் பொறியில்லை சத்தில்லை சிவமுமில்லை
வாதமென்றுங் காண்பதற்கு நீரைச் சேரு வகையுடனே கை முறையாய் வழியாப் ப
நீரமென்ற நீராலே களிச் சுண்ணந் தான் நிலைத்து தப்பா வென்றக் கால் வாதந் தங்கும்
சூதமென்ற சூதமுடன் உப்புத் தொட்டுத் தொட்ட சரக்கெல்லாந் தான் செத்துப் போமே.

87. போமப்பா யிந்த வழியறிய வேணும் யில்லாட்டால் பேயலைபனைப் போல் திரிய வேணும்
வேமப்பா சரக்கெல்லாம் வேகமன் தான் வேறு வே வழியப்பா சொல்லக் கேளு
காமப்பால் பிஞ்சினதால் கழுதை சென்மம் கனதேசி நீராலே சகல மெல்லாங் கட்டும்
ஏமப்பா யிதிலென்ன சருக்கென்றக் கால் எளிதல்ல தேசியுட யிருதய நீரே.

88. தானென்ற தேசியுட பிறவி கேளு தாரணியில் செனங்கள சுவையை யுண்டார்
தேனென்ற தேயுவினிலு சுவையு முப்பாஞ் செனித்த புளியுப்பாசி யது மலமாய் விட்டார்

கோனென்ற தேசிய தக் கொண்டு தப்பா கொடகு சரக்கு வெகு கார முப்ப நீராம்
வானென்ற பூமியிலே விட்டு தானால் மஞ்சள் வெள்ளை யுப்பு து ரை மண்டிப் பொங்கே.

89. பொங்குவது புளியுறைந்த உப்பிலே தான் பூதலத்து மானிடர்கள் மலத்தின் கூறு
தங்குவது தேசியிலே சென்றதானால் தானவரும் நீரப்பா அறியார் வாதி
முங்குவதுக் கந்த நீர் தன்னிலே தான் முப்பூவைக் கச்சி விட மகத்தா முப்பாம்.
மங்குவது சரக்கெல்லாம் காய்ச்சி வாங்க மடிந்து தப்பா தேசியுட மகுத்துவ நீரே.

90. நீராலே சரக்கெல்லா முப்பதாலும் நீராலே சரக்கெல்லா மெழுகதாகும்
நீராலே சரக்கெல்லாங் கட்டிப் போகும் நீராலே சரக்கெல்லாஞ் சுண்ணமாகும்
நீராலே சரக்கெல்லாங் களங்கமாகும் நீராலே சரக்கெல்லாஞ் செந்தூரமாகும்
நீராலே சரக்--------

91. மாற்றிதைத் தான் முறித்து விட வெள்ளி நாற்றில் மருந்திட்ட செம் பொன்னை ஒரு மூராயிய
மாற்றிது தான் ஒன்பதரை தப்பாதன்மை வளமான குடமுலித்தலையுமாச்சு
சாஸ்த்திரத்தைப் பார்த்து திருலென்ன வாளுந் தகடான ரசவியத்தைக் காணார் வாதி
கோத்திரத்தை யறிந்தே தான் பெண்ணைக் கூடுங் கோச பீசத்தை மறந்திடாதே.

92. மறந்திடாதே போனால் வாதந்தங்கும் மகத்தான வாசியில் நீரதாகும்
இறந்திடவே செயுமப்பா தேசிச் சாற்றில் யெடுத்த சரக்கெல்லாந் தான் மாண்டு போகும்
பிறந்திடவே யாகாது பிறந்தாயானால் பெருமையுடன் ஞான வித்தை கற்க வேணும்
கறந்திடும் நல் மேனியதும் வச்சிர காயன் கற்பமதைக் கொள்வதற்குக் கலி யோட்டானே.

93. கல்வி யொட்டா னென்பதென்னமாய் கை பர்சம் கன்னியர்கள் கண்ணியிலே அகப்பட்டே தான்
வலியொட்டான் கற்பத்தை நிலைக் கொட்டாது மான்பர் செய்யுந் தொழிலினால் கெட்டுப் போனார்
நெறி கெட்டால் தவசிருப்பே னென்பான் மட்டை நீலத்தில் பிட்சகனாய்த் திரிவான் பின்பு
தலை யெடுக்க வழி சொன்னால் பிழைக்க வேணுந் தவறிலே வேகாமல் சென்னப் பேறே.

94. பேய கொண்ட மானிடரே ஞான யோகி யில்லாட்டால் பேதலித்த [illegible]த்தமாடு
மாறு கொண்ட வண்டருக்குக் கற்பமேது மடையான சண்டாளருக்கு மாகாதப்பா
வீறுகொண்டு திரிந்தாக்கால் ஞானமில்லை வேரற்ற மரம் போலே சடலம் போக்கு
நாறுகின்ற சடலமது வாசம் பெற்றால் நமனில்லை சாகாமலிருக்கலாமே.

95. இருக்க வென்று மனமுறைத்தாற் கற்பங் கொள்ளு யெழும் பாவி கோபத்தைத் தள்ளிப் போடு
கருக்குள்ள கற்பத்தை முன்பு கொள்ளு சுரசினியில் ன த்தெட்டுக் கற்பமாகும்
பெருக்கமுடன் னைந்திதந்தக் கற்பமேதும் பேசாதே மவுன முற்றுக் கொள்ள வேணும்
உருக்கமுடன் பெண்டாசை பிள்ளையாசை யோட்டினாற் கற்பமெல்லா மோடிப் போமே.

96. ஓடாமல் கரப்பதை நிறுத்த வேணும் உண்மையுடன் கற்பத்தைக் கொள்ள வேணும்
மாடம் விட்டுத் துறவி தனிற் போக வேணும் நாடு விட்டுக் காடதனில் போகுந் தான்
தேடுநல்ல புத்தி தனைப் படைத்து யிருக்க வேணும் தேடுகின்ற மனதிலே
தேட்டமாகி சிந்தையிலே மது கொண்டால் சிதறிப் போமே:

97. தேடுவது மல்லாமல் ஞானப் பேய்தான் செடலமுடன் கொண்டே நானலைக்கும் பாரு
மதகாமியம் பிள்ளை சத்த நினைவன்றி மருந்து கொண்டால் மாடமென்ன மலை தானென்ன
கொாது பட்ட நிவாசி ராசி வேதை கூடாமற் போன தொக்கும் ஞானங் கற்பம்
பதறலென்ன பேச்சென்ன வாதமென்ன பரியாசமோ செவ்வாய பாழிற் போமே.

98\. பாழிலே போகாமல் மனத்தைத் தேர்ந்து பரவஸ்தவை நினைந்து தியானம் பண்ணி
நாளிலே கற்பம தக் கொள்வாய்ப்பா நலமான ரவி வாரம் பூசங் கூடில்
வாழ்வான வல்லாரைச் சூரணஞ் செய் வரு கற்பமாதி யென்று வகுத்துச் சொன்னர்
கோளில்லா நாள் பார்த்துக் காடி தன்னிற் குழைத்து நீ வெருகடி தான் விழுங்கு வாயே.

99\. விழுங்கியே வருஉடமொன்று கொண்டாயானால் விள்ளுவேவி தின் பலன்கள் நரைகளில்லை
ஒழுங்கில்லாத் திரைகளில்லை வலிமையாகும் உடலிலே யழுக்கிட்ட காயமாகும்
நமுகிட்ட தேகமப்பா பலத்துப் போகும் நாட்டிலே யரசனென்று பேர் கொள்ளாதே
எழும்புதற்கு யோகமப்பா யிருக்க வேணும் மிசையான சாரணையைச் செய்து கூட்டே.

100\. கூடுகின்ற கற்பமொன்று சொல்லக் கேளு கோலமிடுவான் நீதரங் கழித்து
ஒடுகின்ற ஆரமப்பா மேற்கே சென்றுயர்ந்த தொரு பாறையுண்டு தெற்கே பார்த்தால்
நாடியதின் கிட்டவே நடந்து சென்றால் நல்ல கரு நெல்லி யொன் அதின் மேல் நிற்கும்
பாடுகின்ற பாட்டுக்குத் தோணுதப்பா பரிவாகப் பாறையின் மேலேறிச் சென்றுவே

101\. செல்லவே செவித்திட்ட மூலமந்திரம் செவித்தே தான் நூத்தெட்டு நிச் செவித் தாயானால்
வல்லமையாம் பாறையிலோர் கையுண்டு வளமாக யதிலிருந்த மண்டலந்தான் பா
நல்லதொரு ரிஷிய மங்கே யெப்போது மிருப்பார் நாடடத்திற் றேணுமப்பா தெரிசினையுமுண்டாம்
சொல்லுவார் செய்தியவர் ஞானப் போக்கு துறை காமந்திர மொன் சொல் வார் தாமே.

102\. ஆமப்பா அவர் சொன்ன மந்திரத் தோடாயிரத் தெட்டு முருவாகச் செய்தி கேளு
வாமப்பா யீசான மூலை தன்னில் வளமான கோவிலொன்று தோணுமப்பா
ஆமப்பா ரிஷி கோடி யாலயத்துள் ளருகிருப்பார் தங்காடி பணிந்து நோக்கு
ஆமப்பா வா வென்று தானழைப்பார் அதிலே யொரு பெரியவர் தான் ஆசிப் பாரே.

103\. ஆசிப்பார் சிந்தை யெல்லாஞ் சோதித்தே தான் அருமையுள்ள கரு நெல்லிக் கனி தான் மூன்று
நேசித்தே கைக்கொடுப்பார் வாங்கிக் கொண்டு நேசமுடன் முன்னேதான் பொசிக்கச் சொல்வார்
பொசித்த கனி கொண்ட பின்பு யருமென்று சொல்லிப் புகழான சீடனென்று கனி கொள்ளென்பேன்
வாசித்தா வென வென்று பேருயிட்டு மகத்தான மனங் களிந்தார் முன்பு சொல்லே

104\. சொல்லென்ற ஒரு கனியைக் கொடுக்கச் சொல்வேன் சீடரு யவரங்கே யிருக்கச் சொல் வன்
வல்லமையாய்ச் சகல மெல்லாங் கத்துக் கொள்வா யாளுஞ் சாகாமலிருக்கச் சொல்வாய்
சொல்லென்ற பொருளெல்லாந் தள்ளிப் போடு சுகமாகத் திறவியிலே யிருக்க வேணும்
மல்லென்ற சனங்களெல்லா மலமா யென்னி மலையேறி வந்த விடக் கலிவாராதே

105\. வாராத வறுமைகள் தான் வந்தா தானுல் வழிக்கு வழியாய் வந்து போக வேணும்
தீராத தீவினைகள் வந்த தானால் சிவன் மேலே பாரமாய்ப் போட வேணும்
பேராளி சத்துருக்கள் வந்த தானால் பதலத்தில் குரங்கது போல் திரிய வேணும்
சார்வாகக் கலி வந்த மூண்டுதானுல் தள்ளி விட்டு மலை மீதிலேறவாயே

106\. ஏவாய் மனக் குரங்கு யேறெட்டாத யிருபதத்தைப் பற்றி முத்தியாகச் செய்வாய்
தேடுகின்ற சடலமல்லோ யோகமப்பா செத்திறந்து போவதுவே சடல வாழ்க்கை
வீடு கொண்டு வாழ்வதற்கு கற்பங் கொண்டு மேனி வச்சிர காயமதாயிருக்க வேணும்
கூறுகின்ற பாட்டெல்லா மிருந்தாந்தக்குள் கூறினேன் விரியா மலறிந்து பாரே.

107\. பாரப்பா பிரமருட லெபியைத் தட்டிப் பாதிலே தள்ளி விடுங் கற்பங் கூற
ஆரப்பா யிதை யறிவாய் கற்ப மெத்தென்பாய் அசடனப்பா உரைக்கின்ற வார்த

சீரப்பா றவியிலே சென்முல் யோக சித்திக்கும் பொதிகையப்பா சீடர் கோடி
பாரப்பா யிக்கால மருத்தோர்கள் தான் பதினையாயிர வகைக்குந் துறையுண்டாச்சே.

108. உண்டான செய்தியப்பா சொல்லக் கேளு உண்மை யிது பேரின்பங் கற்க வேணும்
உண்டான ஞானியப்பா புழுவைக் கவ்வி உபதேசங் கத்தல்லோ வேறே ரூபங்
கொண்டே தானிருக்குதப்பா ஞானக்கூறு அறியுந் தானறியாட்டால் லென் செய் வேணுன்
சண்டாளனுக்கால் நூலே தென்பான் சாஸ்திர மென்பான் கான மடையன் தானே.

109. தானவனிருப்பதற்கு கற்பங் கேளு சதுர கிரி பருவதத்திருக்கச் சேரு
போன பின்பு பருவதத்தில் தென் மேற்காகப் போக விட்டு வட நோக்கி மலை மீதேறு
ஆனதொரு சாம வழி நடந்து போனால் அப்பனே தலை மலையைக் காணலாகும்
யேன முடனதிலிருந்து மேற்கே காதம் யேகிலங்கே யொரு சோலைதானே.

110. சோலை விட்டு வட நோக்கிக் கீழே சென்முல் சுத்தமாய்க் கனைத பெற்ற குகை தானுண்டு
வாலோங்கிற் செல்லையிலே குகைப் பின்பாக வடமேல மூலையிலே தன்னிழல் சாக்சி
ஆலமரம் போலிருக்கும் கன்னில் காரர் அம்மரத்தைக் காண்பதற்குச் சேதி கே
மூல மந்திரம் நூத்தெட்டுச் செவித்தாலால் முழு நோக்கந் தோணு மந்தச் சோதி தானே.

111. சோதியுட விருட்சமப்பா கண்டுதானால் சொற் பெரிய ரிஷிகளெல்லாந் தோண லாகும்
நீதியுடன் மரத்தின் பால் மூன்றே நாள் நிசமாகக் கொண்டு வரப் பால் பழமு மாகும்
ஆதி யிந்தக் கற்பத்தால் கோடி சித்தர் அடிமையாய் வாழ்வார்கள் அம்மரத்தல்
வாழுகின்ற மாதர்களில் ரெண்டு பேரும் மாலை யிடுவார் தேவேந்திரன் வரிசை தானே.

112. வரிசை பெற்றுமே யிருப்பார் கோடி காலம் மாதருடன் கூடியவர் வாழ்வார் காணு
முரிசை பெற்ற முப்புவைக் காண வேணும் முன்மையுடன் கல்லானை யறிய வேணும்
பரிசவத்தில் வேதையிட்டுப் பார்க்க வேணும் பரம சிவபூசை நன்றாய்ச் செய்ய வேணும்
தெரிசனைத்தில் நந்தி வந்து உபதேசிப்பார் திடமாக வாத மெல்லாந் தெரிவிப்பாரே.

113. பாரப்பா தேசிநீர் படி யொன்றில் தான் பாங்காக முப்புவைக் கரைத்து வாங்கி
சேரப்பா கெந்தி பலம் ரெண்டுக்குந் தான் திடமான சீனக்கால் முப்புவுங் காலாய்
ஆரப்பா கனலிலே குறுகக் காய்ச்சி ஆதித்தன் கண்ட பின்பு உப்பதாகும்
பாரப்பா உப்புதனைப் பூரணத்திலேயே பாங்காகக் கலக்கியே ரவியிற் போடே

114. போடப்பா கெந்தி தனவானால் உப்பு புகழாக அதிடவே காரச் சுன்னம்
நாடப்பா சாரஞ் சேர் தன்னீராலும் நாகமுடன் ரசங் கட்டும் வளலை தொட்டு
ஆடப்பா கெந்தியுமோ கட்டிப் போகும் அடங்காத---தேசியட யித்திரன் கூற
தேடப்பா குடனது பலந்தானென்று செப்பமுள்ள வளலையுப்புக் காலுங் கூட்டே.

115. கூட்டுவாய் யித்திரத்தின் நீரினாலே ஞளப்பியே கால்படியாய்த் தெளிவுதனை வற்ற
ஆட்டுவாய் ரவி முகத்திலிப்பதாகும் அப்பனே சிறுநீரால் கரைத்து வாங்கி
மூட்டுவாய் ரவி முகத்திலும்பாய்ப் போச்சு முக்கியமாய்த் தீயாட்டச் சுண்ணமாச்சு
நாட்டமாய்ப் பின்னுங் கேளிந்தாற் கட்ட நல்ல மதியுப்பெனவே சொல்லலாச்சே.

116. ஆச்சப்பா வழலையுடன் வீரஞ் சீனம் அப்பனே புடமிட்டுக் கல்லுப்புக் கப்பி
பாச்சப்பா ஒதிடவே சுண்ணமாகும் பாங்கான வழலையுட சேதி கேளு
நீச்சப்பா பூமியுட நாதந்தன்னை நிலைத்ததொரு சேதியாய்ச் சொல்லக் கேளு
வாச்சப்பனதொரு வழலையப்பா காரசாரம் மகத்துவத்தை முன்பொருக்காற் சொன்னேன் காண்.

117. காணப்பா நான் செய்த கட்டு முறையப்பா கருணையுடன் நந்தி சொன்ன முறையே
தென்னுல்
ஊணப்பா யோகம் வைத்துப் பூமிநாதம் உத்தமனே யிந்தாலே கட்டிப் போகும்
வீணப்பா தேசியல்ல பூரணந்தான் வீறு கொண்ட பங்காளில் நீரதாச்சு
தோணப்பா யிக்குருவே முதற்குருவாமப்பா சொல் முறைகள் தப்பாமல் வாதம்
பாரே.

118. வாதமிது உள்ளபடி முற்றச் சேதி மகத்தான குருவப்பா முடிக்கலாகும்
போதமிது வழலையிது சுத்த மேனி போக்கிதையே யறிந்தாக்கால் லவனே வாதி
நீதமிது வங்க வித்தைக் காடுமாடு நிசமான வழலையப்பா பூமி யீன்ற
நாதமிது சொன்னதுங் காரசாரம் நந்தியான வழலையப்பா யிந்தப் போக்கே.

119. போக்கோடே பரணத்தைப் பாரு பாரு புகழான புறவமே திசமே தீட்சை
வாக்கோடே யேறதற்கு நீருண்டாகும் மகத்தான வழலையப்பா யாகாசந்தான்
தாக்கோடே பெச்சரக்கு சுண்ணமாகும் தன்மையுடன் மதியமுர்தம் பார்க்கவே
யுன்
நாக்கோடே மேல் வாசல் தட்டுந் தட்டும் நலமான வழலையைத் தான்
வாங்குவாயே.

120. <u>மதியமுர்தம்</u>:-

வாங்குவாய் வழலை தன்னை வீரஞ் சேர்த்து வளமான சுக்கிலமுங் கூட விட்டு
சாங்கமாய்க் கற்பூரஞ் சனஞ் சேர்த்து சாத்குவாய் குரிசியின் மேற் சுண்ணமாகும்
ஓங்கி நின்ற ரசங் கெந்தி பாசாணந்தான் ஏகோகோ பட்டுவிடும் வாட்டுந்
தானே.

121. தானென்ற குரிசியிலே ரசத்தைக் கூட்ட சந்திரப்பான சுண்ணங் கெந்தி சுண்ணம்
தேனென்ற சுண்ணமப்பா சரியாய்ச் சேர்த்து திறமாக நாலிலொன்று சாரங் கூட்டு
வானென்ற வழலை யிட்டு வீரங் கூட்டி வளமாகக் குரிசிக்கு அங்கியிட்டு
தானென்ற ரவிக்குள்ளே சுண்ணமாகும் சாரஞ் சேர் குரிசியது சிலமதாமே.

122. ஆமப்பா ரசந் தனக்குச் சுருக்குத் தாக்க ஆனையப்பா பட்டுதினிக் கெந்தி சேரு
போமப்பா செந்தூரம் பஞ்சலோகம் போடப்பா களஞ்சியொன்றுக் கொரு
மஞ்சாடி
நாமப்பா கண் கண்டோம் பத்து வர்ணம் நாயுருவி நீத்துள்ளே கல்லுப்பிட்டு
வேமப்பா கல்லுப்புச் சுத்தியாச்சு வீரமுடன் வழலையைத்தான் கூட்டிக் கொள்ளே.

123. கொள்ளப்பா சீனமுடன் புருடன் தான் கூறியதோர் கல்லுப்புக் கவசம் பண்ணி
மெள்ளப்பா சுண்ணமது குரிசுக் கப்பி விதமான ரவிக்குள்ளே போடச் சுண்ணம்
சுண்ணப்பா செய்நீராஞ் சாரஞ் சேரு காரமுடன் வெகு காரமிந்த நீர்தான்
உள்ளப்பா கெந்தியுடன் சாதிலிங்கம் அரையான வீரமிட்டு ஆட்டுவாயே.

124. ஆட்டுவாய் குகைதனிலே சவ்வாது கட்டி அப்பனே மணியாகுங் களங்கமாகும்
பூட்டுவாய் நவலோகம் நூற்றிலொன்று போடவே பதினொன்று மாத்துமாகும்
மாட்டுவாய் வழலையிலுற் காணவேணும் மதியமுர்தங் கொண்டவனே ஞானியாகும்
மூட்டுவா யக்கினியைத் திங்களாலே முனைக்குஞ் சுழி முனையைத் துறந்து தாக்கே

125. தாக்கி யிரு கண் மூட்டால் கடுப்புத் தோணுஞ் சலியாதே வாய்வுதனை யழுத்தி
வாங்கு
வாக்கிலே நன்கென்ப யெழும்பிச் சாவல் வளமான சுழி முனைதான் நன்றாய்த்
தோணும்
போக்கிலே விட்டுவிடு கடினமாகப் பொறியாதாகுள் வாசி யேறலாகும்
மூக்கிலே குருவுடன் கேது கூடி முன்குக்குங் குண்டலியை மூட்டலாமே.

126. மூட்டுதற்கு சமாதியிலே யிருக்க வேணும் மூதண்ட குளிகை தனைச் செய்ய வேணும்
கூட்டுதற்கு கற்பத்தைக் கொள்ள வேணும் குறிப்பான சாரணையைக் கூட வேணும்
நாட்டமாய்த் தீட்சை விதி பத்து நன்றாய் நலியாமல்க் கந்துணர்ந்தே யிருக்க
வேணும்

127. கொள்ளப்பா கோங்கிட பூவைத்தானே கொண்டு வந்து நிழலுலத்திச் சூரணே செய்து
கொள்ளப்பா அருபானந் தேன்பால் நெய்யாங் கூட்டவே சக்கரையுங் கூட்டிக் கொண்டு
கொள்ளப்பா மண்டலந்தான் மூன்று கொண்டால் வன்றெடுத்த மாயோன்றன் வய துண்டாகுங்
கொள்ளப்பா பாலுடனே சோமமாங் கூட்டி யொன்றைக் கொண்டாக்கால் கொள் ளா நோயே.

128. <u>சவுக்காரச் சுண்ணம்</u>:-

நோவாளும் பேய் சொள் வாயெல்லாம் போகும் நோன்பாக யிருந்தாக்கால் கற்பந்தங்கும்
பாவாகுஞ் சயமெல்லாஞ் சொல்லலாகும் பகலவன் போல் சாந்தியுண்டாம் பசவை யாவான்
நாவாலே பலனப்பா சொல்லப் போகா ச்சேந்திரன் கன்விதனை மேவுவான் காண்
பூவான வழலையிலே சவுக்காரந்தான் போக்சோடே விட்டிடவே யென்னை தானே.

129. என்னை தனை வாங்குதற்குச் சொல்லக் கேளு யிளங்குமரி சி நீரில் சுண்ணம்
வன்னமுள்ள பூத்தனையுஞ் சரியாய்க் கூட்டி வளமாக நீத்தியே வாங்கு நீரை
வெண்மையுள்ள சாரை தன்னை உரைத்துப் போட மீறிய தோரென்னை சுக்கும் வெயிலில் வைப்பாய்
நன்மையுடன் பின்னெருக்கால் யிப்படியே நீறும் சவுக்காரத் தென்னை யெல்லாங் கக்குந்தானே.

130. கக்கினதோர் வழலைதனைச் சொல்லக் கேளு கற்சுண்ணம் நீரினதில் நாதங் கூட்டி
முக்கியமாய்க் குருவன்றுங் கூட்டிக் கொண்டு மூலத்தால் வழலை தன்னைக் கலசங் கட்டி
மெய்க்கவே தீயாட்டச் சுண்ணமாகும் விருதான சுண்ணமிது குருக்கு வழியப்பா
முக்கியமா யிக்குருவைச் செய்தாயானால் மோகிக்கச் சாரமொன்று கூட்டியாட்டே.

131. ஆட்டியே பீங்கானில் வைத்து வைக்க சலமாகுஞ் செலத்திலுள்ளே
போட்டிடுவாய் கல்லுப்புத் தன்னை யப்பா தீபுகழாக ஊதிடவே சுண்ணமாகும்
பூட்டுதற்கு அரிசியின் மேலெறிச்சானால் போதமுள்ள குருவந்தான் கொண்டு யேறி
மாட்டுவாய் மணி போலே யாகுமப்பா அரகரா உப்பாலே சொல்லலாச்சே.

132. ஆச்சப்பா யித்தனையும் யிந்திலே அரகரா ரவி கட்டிப் போனதாலே
வாச்சப்பா வழலையொன்று கண்டோங் கண்டோம் வளமான அண்டத்திரா றலாக
வீச்சப்பா வாத மடந் திறந்து போச்சு வெளியோடு சிந்தை வைத்து திறயி தாச்சு
போச்சப்பா வாதமெல்லா மடங்கிப் போச்சு பொன் டம்பே உப்பான அடியைப் பாரே.

133. அடியிலே பொல பொலவைவு திருமப்பா அம்புலியைக் கண்டவுடன் மேகத்தாலே
கொடியான வழலையென்பாரதிலே யுண்டு தொடுகின்ற வித்தை யெல்லாம் பூரத்தாலே
வெளியிலே தான் பிறந்த நிலவு பாகும் மேகம் விட்ட யிந்தாலே ரவியைக் கட்ட
கொடியதொரு பச்சையப்பா கூடன் சேரு சேர்க்கிறது பரணத்தில் விதி விறைஞ்சுப் போமே.

134. விறைஞ்சுதப்பா சனங்களெல்லாங் கற்பமுண்டுல் வெந்ததொரு பிடி சாம்பலாகிப் போனார்
உறைஞ்சுதப்பா சித்தரெல்லாங் கோடி கோடி உண்மையுடன் கற்பத்தைக் கொண்டதாலே
மறைஞ்சுதப்பா பெண்டு பிள்ளை பிறவிதந்தை மாதர்வின் சுத்தமொடு பாசங் கொண்டு
குறைஞ்சுதப்பா சீவனெல்லாம் பிறவிக்காக கொடுங்கனவிலே தானே யிட்ட வாறே.

135. இஷ்டமுடனிருப்பதற்குக் கற்பங் கேளு யிசைவான திரிகூட மலையின் மேலே திட்டமுடன் பொலுந் தீர்த்தமுண்டு
தீர்த்துக் கொருகாதஞ் சென் போனால் வட்டமொரு மலையுண்டு
காலால் தேய்த்தால் மாத்துள்ள செம்பாகத் தோத்துமப்பா
கட்டியதோர் மலையிற் குதவ் தன்னைக் கைக்கொண்டு தேய்த்திட கட்டிப் போமே.

136. கட்டியதோர் சூதத்தைக் குளிகையாக்கி கதப்புளே யொளுக்கி வைத்தால் கவச தேகந்

திட்டியுள்ள ரிஷிகளெல்லாங் கண்ணில் தோன்றும் திறமான கற்பமெல்லாங் கண்ணில் தோன்றும்
வாட்டிடமுந் கொட்டிடமுந் தெரியாமல்த் தான் வேதைகளுந் தோணுமப்பா விரைந்து கேளு
ஒட்டியதோர் பாறையின் கீழ் ரோமவேங்கை யுண்டதிலே அதிலுடைய பாலை வாங்கே

137. பாலையொரு பீங்கானில் வாங்கிக் கொண்டு பரிவான கெந்தகத்தை யாட்டிக் கொண்டு
சீலையிலே பூட்டியே திரி கொளுத்தி தீப்பிடித்துத் தயிலமதாம் பின்பு கேளு
வாலையாம் பாறையிலே தேச்சரங் கட்டி மாட்டியரை நாகமுந் தான் கட்டிக் கொண்டு
மேலக் கொடுவேலியதுக் கருக்கவுண்டு நிசமாக அச்சாத்தை விட்டு ஆட்டே.

138. ஆட்டியே மெழுகாக்கிப் புடத்திற் போடு அப்பனே செந்தூரமாகும் பாரு
நாட்டமாய் நித்தமொரு மாவே கொள்ளு நன்றாக மண்டலத்தில் வேறிக் கொண்டு
மூட்டலே பணப்பா சொல்லப் போகா மூதண்ட குளிகையு மாங் கெவுன சித்தி
வாட்டமில்லா அஷ்டசித்தி யோகஞ் சித்தி மரணமில்லை யென்னும் வாலையாமே.

139. வாலையுட பூசை செய்தால் வாதந் தங்கும் மணமான சாரணைக்குங் கெவுனந் தங்கும்
காலையெனும் வாயுவிலும் யோகந் தங்கும் கட்டான தீட்சையிலுஞ் சமாதி தங்கும்
நாலு பத்து முக்கோண சக்கரமே தங்கும் நமனில்லை சாகாத வரமே தங்கும்
மூலமுண்ட கண்டவருளன்றுகஞ் சென்று அடுத்த தெச தீட்சை யிது அறிந்து பாரே

140. அறிந்திந்த நால் பார்த்து வேதைபாரு அறிந்திந்த நால் பார்த்துத் தீட்சை பண்ணு
அறிந்திந்த நால் பார்த்துக் குளிகை சேரு அறிந்திந்த நால் பார்த்து வழலை வாங்கு
அறிந்திந்த நால் பார்த்து அடியைப் பாரு அறிந்திந் நால் பார்த்துச் செய்நீர் பண்ணு
அறிந்திந்த நால் பார்த்துச் சுண்ணம் பண்ணு அறிந்திந்த நால் பார்த்து வாதம் பாரே.

141. பாரப்பா சூடனென்ற சீனமொன்று பரிவான புளியெட்டு வெடியுப்பெட்டு
பாரப்பா முப்புவின் குருத்தானென்ற பண்பான கல்லுப்பு ரெண்டுங் கூட்டி
சீரப்பா யிந்துப்போ ஒன்று கூட்டி திறமாகச் சம்பளத் தாலாட்டிக் கொண்டு
தீரப்பா தீக்கொளுத்தி யெரித்து வந்த திட்டமுடன் சுண்ணம்பாஞ் சாரஞ் சேரே.

142. சேரப்பா யெட்டிலொன்றுயச் சேர்த்துக் கொண்டு திறமாகப் பீங்கானி லிருக்கத் தண்ணீர்
உரமும் பனவிடையாய்ப் போட்டுக் கொண்டு போக்கான துறைகளெல்லா மிதிலே யாடு
காரப்பா கட்டிப் போஞ் சுண்ணமாகுங் காரத்திற் காரமுற வகையைக் கேளு
பூர உப்பில் வழலை யிட்டு மத்தித்தே தான் புகழ் பெறவே காரத்துக் கப்பிக் கொண்டே.

143. கொண்ட பின்பு ரவியிக்குள் மயங்கப் போடு கொக்கிறகு போலவே காரச் சுண்ணம்
கண்டதொரு காரத்திற் கார மத்தி கல்லுப்பைக் கூட்டி மணியாக விட்டு
பண்டையிலே திரிகோணத் தயில முட்டு பஞ்ச லோகங்களெல்லாம் பழுக்கும் பத்தாம்
விட்டதொரு தேசிதனைக் கேளு சேரு விதமாக திருகு கள்ளிப் பொருக்கைச் சுட்டே.

144. சுட்டதொரு சாம்பலைத் தான் தேசிச் சாற்றில் சொல்லுகின்ற சாம்பலொன்று நீர்தான் நாலு
கட்டி விடுந் தீ யெரிக்கச் சாம்பலெல்லாம் கரைத்த நீர்த் தெளிவை யெல்லாம் உப்பதாச்சு
திட்டமுடனிந்த உப்பிலில் வீரஞ் சீனந் திறமான புழுகுடனே வழலை கூட்டி
மட்டாகப் புடம் போடு சுண்ணமாச்சு வாச்சதொரு அம்மரத்தில் பாலில் போடே

145. போடப்பா சிலமாகு யிந்த நீரில் புதுமையுடன் பூரம் பனவிடையாய்ப் போட்டு
ஆடப்பா பாலிங்கத்தை தோய வாட்ட அரகரா மெழுகாகும் ரவி மதியாம் ரெண்டில்
ஆடப்பா அல்பதுக்கு ஒன்று போடு அப்பனே எழுரையு மாத்து மாறும்
நீடப்பா கை கண்ட வித்தையாகும் நிசமாக யின்னமொரு வழி சொல்வேனே.

146. <u>அன்னபேதி உப்பு:-</u>

வழியான சேதியப்பா அன்ன பேதி வகையாகப் பழச் சாத்தாலரைத்துக் கொண்டு
தெளிவான அச்சாத்தில் கலக்கிக் கொண்டு சேர்க்கவே காச்சி விட உப்பதாகும்
ஒளியென்ன பேதி உப்புத் தேசிநீரில் உத்தமனே முன் சொன்னபடி வீதம் போடு
வெளிபெறவே கலக்கியதைத் தெளிந்த பின்பு விருதான முப்புவால் காச்சு காச்சே

147. காச்சியே ஏறுக்கி யுப்பை யெடுத்துக் கொண்டு கல்லுப்பு வீரமொடு சரியாய்ச் சேர்த்து
வாச்சுதே வழலையிலரைத்துக் கொண்டு வன்மையுள்ள பேதியுப்பு பிடத்தில் சுன்னம்
பேச்சிலியே திருக்குதப்பா வீரஞ் சீனம் பேரான புழுகிட்டுத் தருசக்கப்பி
ஆச்சுதே ரவிக்குள்ளே பொதிந்து ஊத நல்லதொரு ப்ச்சையப்பா சுன்னமாமே.

148. சுன்னமப்பா வெள்ளெருக்கம் பாலிற் போடச் சொல்லிடுவாய் மூடு முன்னே தங்கீராகும்
என்னமுள்ள நீரப்பா வீரஞ் சேர்த்து யினையான தருசுக்குப் பசிக் கொண்டு
வன்னமுள்ள ரவிக்குள்ளே மயக்கிப் போடு வாச்சு தப்பா அரிசியுட சுன்னந் தன்னை
உன்னுதற்கு அண்டத்தின் வெண் கருத்தானப்பா ஒகோ கோ நிர்மலமாய்ப் போனதாச்சே.

149. ஆச்சிந்த மண்டத்தின் நீருக்குள்ளே அப்பனே வீரமொன்று சொல்லக் கேளு
வாச்சிந்த மஞ்சள் நீர்க் கருவை வாங்கி வளமாக ஓட்டில் வைத்துச்சுருக்குத் தாக்கு
ஏச்சிந்தக் கருவென்ன கட்டிப் போச்சு மெழுகுமாச்சு கெந்தகத்தை
ரூச்செழும்ப ஒட்டாமல் கவசங் கட்டி முன் தீயிலாட்டிடவே கட்டிப் போச்சே.

150. கட்டியதோர் கெந்தகத்தை வெள்ளி நாத்தில் கடுக ஒரு மாவிடவே கவசமாச்சு
மட்டில்லா செய்தியப்பா நாகஞ் சேர்ந்தால் மன்னுயிலை கல்லுமிலை செந்நாரத்தில்
வெட்டினியா தங்கமென்றதிலே வேதை விள்ளுகின்றேன் கட்டியதோர் செந்திதன்னை
திட்ட முடன் மூகை தன்னிலே உருகும்போது திறமாக வீரத்தைச் சேர்த்துத் தாக்கே.

151. தாக்கப்பா லிங்கமொடு சீனம் பூரந் தாளகமுங் குதமொடு சரியாய்க் கொண்டு
தாக்கப்பா மணியின்ளே கூடு மாடுஞ் சாதகமா யிர்திடைக்குத் தங்கங் கூட்டி
தாக்கப்பா யாடையிலே சவாது யிந்தால் தாதளப்பாய் மணி போலே கன்விட்டாடும்
தாக்கப்பா யிதின்ளே------ ---------

152. கேளப்பா யிதுக்கெல்லாம் வழலை வேணும் யில்லாவிட்டால் முதலெல்லாங் கெடுதியாகும்
வேளப்பா கற்பத்தைக் கொள்ள வேணும் யில்லாட்டால் மேனி வெந்து சாம்பலாகும்
கேளப்பா சொல்லுகிறேன் கற்பமொன்று தனிவான கரந்தை யிது சமூலம் வாங்கி
நாளப்பா நிழலுலத்திச் சூரணஞ் செய் நயமான சீனியுடன் கொண்டு பாரே.

153. பாரப்பா வருஉடமொன்று கொண்டாயானால் பரிபாலனுமப்பா சடலமெல்லாம்
பாரப்பா தங்க மிட்ட காயமாகும் பளிச்சென்று செங்கழுநீர் வாசமாகும்
சாரப்பா சரஸ்வதி நிறந் செய்வாள் பண்பான கருவெல்லாந் தோய்ந்து போகும்
பாரப்பா சித்தியெல்லாந் தங்கி வாழ்வாய் பரையன்ற நாத விந்தைப் பகருவாளே.

154. பகருவாள் வாலையுட சேதியைத் தான் கேளு பண்பான ரகசியந்தான் பூரணந்தான்
பகருவாள் தனித்த பச்சை ரவியைத் தானே பாரு நீ யிந்தாலே கட்டிப் போச்சு
பகருவதேன்றாலே வழலையாச்சு மற்ற வகைக் கருவெல்லாம் பாழாய்ப் போச்சு
பகருவ தேன்றாலே களிச் சுன்னங் கோடி பார்ப்பதற்கு முப்புலே சுன்னமாமே.

155. ஆமப்பா சுன்னத்தாற் சுன்னங் கோடி அப்பனே மெழுகோடு களங்கு கோடி
சேமப்பா செந்தூரங் கோடாகோடி சேர்ந்து நின்ற கட்டுவமு முருக்கிமுங்

பேரமப்பா வேதையிலே கோடா கோடி புகழ் பெற்ற குளிகையு மோ கோடா கோடி
நாமப்பா கண் கண்டோம் நாட்டிலுள்ளோர் நன்மையுடன் வாத வித்தை நயந்து காணே.

156. காணப்பா கொடிக்கள்ளிச் சடுகு தன்னை கனல் மூட்டிச் சாம்பலாயெரித்துக் கொண்டு
தோணப்பா தேசியுட நீரிலே தான் சொல்லுகின்ற சாம்பலெல்லாங் கரைத்து வைத்து
தானப்பா தெளிவாக யிறுத்துக் கொண்டு தான் கருத்த பாண்டத்தில் தானே காச்சு
பேமப்பா உப்பாஞ்சு வீரம் பூரம் இணையான வீரமுடன் புகுக சேரே.

157. சேரப்பா வளையலையுட னரைத்துக் கொண்டு திறமான சரக்கெல்லா முப்பிடையாய் கொண்டு
சேரப்பா ரவிக்குள்ளே மயங்கப் போடு திறமான கொடிக் கள்ளி யுப்புச் சுண்ணம்
சேரப்பா அயமரத்தின் பாலிற் போட அச்சனத்தில் நீராச்சு யென் சொல்வேனுன்
சேரப்பா வீரபூரம் போட்டுக் கொண்டு செல்வமுள்ள நீராம் பச்சைக்கு குத்தே.

158. முத்தவாய் பதினொரு நாள் சுத்திப் பின்பு சுருவேல் வீரமொடு சீனக்கார
முத்ததொரு பழுதுடனே கட்டிக் கொண்டு உற்பனத்தின்னீராலே கட்டிக் கொண்டு
சித்தி பெறத் தரிசிக்க கவசங் கட்டி திறமான ரவிக்குள்ளே மயங்கப் போடு
முத்தி பெற்ற அண்ணயிது வீரஞ் சேர்த்து முக்கியமாய் வந்து வித்தை பார்டுவாரே.

159. நடுவார் நாதாக்கள் சித்தரெல்லாம் அப்பலே கல்லாவைக்குள்ளே போடு
நடுவார் ரவி கொட்டு யென்ன சொல்லேன் மக்களே காய சித்தி மகிழ்ந்து பண்ணே
தேடுவாய் நீராச்சு சமூலமெல்லாம் செப்பரிது செப்பரிது சொன்னேன் கேளு
ஒடுவாரறிந்த மட்டுமப்பா கேளு உத்தமனே வழலை விட்டா லெல்லாம் போச்சே.

160. தேத்தான் விரைப் போக்கு: போச்சப்பா சரக்கெல்லா முண்டு தானே
போவதிறல் வழலை பட்டு வேதையாச்சு பாச்சப்பா தரிசதிலே சுண்ணமாச்சு
பாங்கான சீதேவி கட்டிப் போச்சு
வாச்சப்பா வங்கமது சுண்ணமாச்சு வளமான பொன்னி யினை நீறிப் போச்சு
ஒமப்பா சாரமது நீறிப் போச்சு ஒகோ கோ சாரத்தாற் தரிசு நீத்தே.

161. நீராலே செந்தூரங் கோடா கோடி நிலைத்து நிற்கும் ரசகுளிகை கோடா கோடி
நீராலே கட்டினமும் கோடா கோடி நிர்மலத்தின் சாரணைதான் கோடா கோடி
நீராலே சுண்ணமப்பா கோடா கோடி நிலைத்ததொரு கொடிக் கள்ளி யுப்புப் போச்சே.

162. போக்கான சேதி யொன்று சொல்லக் கேளு பழமையுள்ள வெந்தெந்த நீராகும்
வாக்கான தேத்தம் விரை யுரைத்துப் போடடு வந்ததவே தெளிவு கொண்டு பார்த்தால் சித்தி
தாக்கர்க முறிஞ்சுதப்பா நீருதானே சாத்திரத்தைப் பார்த்தல்லோ அறிய வேணுமப்
சரக்கான குருச் செய்தாலே என்ன மில்லை தன்மையுடன் வழலை தன்னை யறிந் திடாயே.

163. அறிவான சேதியப்பா சொல்லக் கேளு உனக் கற் சுண்ணமது சோலி மெத்த
அறிவாகப் பச்சைரவி யிந்தால் கட்டி அடவாகச் சரக்கெல்லாம் சுண்ணம் பண்ணு.
அறிவுடனே வீரமிட்டு வேதை பாரு அப்பனே யேழெட்டுங் காணுங் காணும்
அறிவாக யிதைத் தொட்டுச் சீவனத்தைப் பண்ணு அலைவந்த வித்தை யெல்லாம் பிறகு பாரே.

164. பாரப்பா வழலையிலே வீரங் கட்டிப் பச்சை தனக்கப்பியே ரவியிற் போடு
நேரப்பா தரிசம் தான் சுண்ணமாகும் நேராக வீரமிட்டுப் புடமு சீவம்
சாரப்பா தாளகத்தி லப்பி பூ சலவை போலாச்சுதப்பா அரிதாரந் தான்
தாரமிது மஞ்சாடி கொடுக்க வாதி தன் மதியில் மூலேயில் கொடுக்கச் சொல்லே

165. செல்லுமே கடைக்கெல்லாம் யெட்டே குளி திறமாகச் செய்து கொண்டு சொல்லக் கேளு
வல்லதொரு சீவனத்தைப் பண்ணிக் கொண்டு மகத்தான வழியெல்லாம் பிறகு பாரு
நல்லதொரு கோசத்தை மறந்திடாதே நன்மன பீசத்தை மறந்திடாதே
~~[illegible]~~
செல்லுகிற வாசி காலெல்லாம் கோவைக்கல் போல்
தியான மனக்கத்துக் காரியமொரே.

166. ஆதியாந் தாளகத்தை விட்டாலில்லை அப்பனே செந்தூரப் போக்குக் கெல்லாம்
நீதியென்ற வீரத்தை விட்டால் போச்சு நேரான மெழுகு வகை சேதிக் கெல்லாம்
ஆதியென்ற சாரம் விட்டால் செய்நீர் போச்சு மகத்தான குளிகையிட்ட சாரணைக்கு
பேதியென்ற ரசம் விட்டால் குளிகை போச்சு போக்கான சுன்னத்தின் கருவைக் கேளே.

167. கேளப்பா வீரமொடு பந்தாணம் கெடியான தோர் பச்சைப் புழுகுங் கட்டி
தோளப்பா சுன்னமிதாலொன்று மில்லை இங்கு ஒலைகள் இல்லை.

168. திடங் கொண்டு மலை மீதிலேற வேணும் காரப்பா குகைதனிலே யிருக்க வேணும்
கற்பத்தாற் சமாதி கொண்டு யிருக்கலாமே.

169. இருக்க வென்று மனமுறைத்தால் முறைங் கொள் இன்பமுடன் கடுக்காயின் கற்பந் தின்று
பெருகிக வொரு கற்பமப்பா வீழி தின்று பேதமில்லாத் தயிலங் பிறகு கொள்ளு
படுக்கவொரு கரியாகக் கொண்டு பாரு பசுபான ஒத பற்பங் கொண்டேயேறு
திருக்கரே கொண்டாக்கால் ஞானசித்தி திடமிருவ காரத்தில் மூன்றுங் காணே.

170. காணப்பா சுரோணிதத்தை யஞ்சாங் காச்சல் கட்ட பின்பு பாறையுப்பு யேழு காச்சல்
பூணப்பா கல்லுப்புச் சத்தி வெள்ளம் பூமியுட நாதத்தில் பூரண மெட்டாகும்
ஆமப்பா சுக்கிலத்திருப்பு தன்னை அப்பிலே கரைத்துத் தெளிவை வாங்கி
பேணப்பா கரி யோட்டிவிட்டுத் தானே பலமாக ரவி முகத்தில் வைத்திடாயே.

171. வைத்திருக்க ஒட்டுப் பாஞ் சிவந்தானப்பா மகத்தான முப்பூவு முடிக்க கேளு
சுத்தமாங் கல்லுப்பு மாறும் பெண்ணுந் தோணவே சொல்லுகிறேன் கேளு கேளு
செற்றவிடச் சுன்னமப்பா சரியிடையாய்க் கொண்டு தேசியுட நீராலே களிச் சுன்னந் தான்
வத்தவே காச்சிப் பின்னெடுத்துக் கொள் வளமான களிச்சுன்ன மாச்சுப் பாரே.

172. ஆச்சுதப்பா களிச் சுன்னம் பன்னிரெண்டு அழகான சீனமொடு வீரம் பூரம்,
வாச்சுதப்பா புழுகுடனே யாட்டுதற்கு வாய்ப்பான செய்நீரால் ஆட்டு ஆட்டு
போச்சுதப்பா அன்னம்பாய் வெந்து போச்சு பொரியான சரக்கெல்லாம் வகை வீதமுண்டு
போச்சுதப்பா களிச் சுன்னம் பெரியோர் சொல்லார் பேய்ப் பாட்டாய் பாடி விட்டார் நூ லெல்லாமே.

173. நூலெல்லாஞ் சொல்லார்கள் களிச் சுன்னத்தை உற்பனமாய்ப் பாட விட்டேன் வழலை கட்டி
பாலென்ன வெண்ணையப்பா ரவியிற் போட்டால் பச்சையுடன் அட்டகுவும் பாறையுப்பும்
காலென்ன சுன்னத்தின் கருவைக் கேளு காரணமாய் வந்ததப்பா பூரணந்தான்
வாலிபத்தின் வெடியுப்பு நீரிலலே வழலையென்ற நர்ம மெல்லார் தலங்கிப் போச்சே.

174. துலங்காமல் பாடினருலகத்தோர்கள் சுட்டலைந்து கெடுகிறதாய்ச் சலித்துப் போக
மலங்காதே யென்னுடைய நூலைப் பாரு மகத்தான வழலையட கருவைச் சொல்வேன்
கலங்காதே யிந்தாலே ரவியைக் கட்டி காரமென்ற சார வித்தை யாருமாகும்
விலங்காதே பதினோராஞ் சரக்கைப் போடு வீரமுட நாட்டுதற்குச் சொல்லக் கேளே.

